# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS 34/2015 நாள். 13.09.2022**

**போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தர்மலிங்கம் | வயது | |
| த/பெ. க/பெ. | திருப்பதி கவுண்டர் | மதம் | |
| முகவரி | | தொழில் | |

**வா.சா.4 ஆஜர். பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கிருஷ்ணகிரி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் 1996 முதல் வசித்து வருகிறேன். நான் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் குடியிருந்து கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டிணம், சூளகிரி மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் 1996 முதல் ஓய்வு பெறும் வரை BDO ஆக வேலை செய்தேன். நான் 2007 ம் வருடம் பணி ஓய்வு பெற்றேன். அதன்பிறகும் கிருஷ்ணகிரியில் உள்ள அதே குடியிருப்பில் தான் வசித்து வருகிறேன்.

2.வாதி என்ன சர்வே எண்னுக்கு ஸ்திரனத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண். 241 சுமார் 4 ஏக்கருக்கு மேல் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். செக்குபத்தி அத்திகானுர் போச்சம்பள்ளி சாலைக்கு கிழக்கு. புளியம்பட்டி மயிலம்பட்டி தார்ரோட்டிற்கு தெற்கு. பட்டாபி நிலத்திற்கு மேற்கு சின்னதம்பி வகையறா நிலத்திற்கு வடக்கு ஆகும்.

3.வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் எந்தெந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கு நடைபெற்ற விவரம் எனக்கு தெரியாது. பட்டாளம்மன் கோவிலுக்கு யார் இடம் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த நிலத்தை யார் பூர்விகமாக அனுபவித்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 1970 முதல் 2016 வரை ஆறுமுக கவுண்டர் அனுபவித்து வருகிறார். எனக்கு தற்போது 74 வயதாகிறது.

4. எனக்கு விவரம் புரிய ஆரம்பித்த ஆண்டு 1963 ஆகும். ஆறுமுக கவுண்டர் என்ன அடிப்படையில் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் குத்தகை அடிப்படையில் அனுபவித்து வந்தார். நான் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே குத்தகை பற்றி வருவாய்துறை மற்றும் நீதிமன்றம் வழக்கு சொத்து தீர்வுகாணப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுமார் 40 ஆண்டுகளாக வாதியும் அவரது மகனும் அனுபவித்து வருவதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களைப் பொருத்து முதன்முதலில் யாருக்கு எப்போது குத்தகை விடப்பட்ட விவரம் எனக்கு தெரியாது.

5. தபசில் சொத்துக்களை பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்த பூசாரி பூஜை

செய்து அனுபவம் செய்து வந்ததார் என்றும் அவருடைய இறப்பிற்கு பிறகு பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. குத்தகை பணத்தில் செடல் மரமும் மரத்தேரும செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 04.11.1993 முதல் பிரதிவாதியும், தகப்பனாரும் தபசில்சொத்தில் விவசாயம் செய்து அதிலிருநது வரும் வருமான்த்தை கொண்டு கேவிலுக்கு பூசை செய்கிறார்கள் என்றால் சரியல்ல.

6. குத்தகை தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாக எனக்கு நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. பட்டாளம்மன் கோவில் நிலத்தில் சோளம், துவரை ஆகிய பயிர்கள் பயிறிடப்பட்டதாக முதல்விசாரணையில் சொல்லப்பட்ட சங்கதிகள் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்து இடம் பொருத்து எனக்கு எவ்வித விவரமும் தெரியாது என்றும், தாவா சொத்தில் 4 எல்லை விவரமும், சர்வே என்னும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அரியபூபதி மற்றும் ஆறுமுக கவுண்டர் எனது பங்காளிகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.